# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SPR / 9/1–3, 31–05–2006 நாளிட்டது)

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**பொருள் – த.மி.ஒ.ஆ. மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகள்**

---

ஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 57ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளை குறித்துரைத்துள்ளது. இந்த ஒழுங்குமுறை விதிகள் 01–09–2004 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நாளிலிருந்து 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதி தவிர, அனைத்து ஒழுங்குமுறைவிதிகளும் நடைமுறைக்கு வரும்.

(2) 21ஆம் ஒழுங்குமுறைவிதி, செயல்திறங்களை நிறைவேற்றத் தவறுவதற்காக உரிமம்தாரர்களால் செலுத்தப்படவேண்டிய நஷ்டஈட்டினை வகுத்துரைக்கிறது மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதி நஷ்டஈடு செலுத்துவதற்கான நடைமுறையை வகுத்துரைக்கிறது.

(3) தமிழ்நாடு மின்சார வாரியம், செந்தரங்களுக்கு உகந்தவாறு செய்வதற்கும், புதிய சூழலுக்கு அதனுடைய பணியாளர்களின் மனநிலையை மற்றும் அணுகுமுறையை மாற்றுவதற்குமான தேவையுடன் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள அதற்குத் தேவைப்படும் கால அவகாசத்தை பரிசீலனை செய்தல், ஆகியவை 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதியின் கீழுள்ள 1(iii)ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளது, இந்த ஒழுங்குமுறைவிதி அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 1 ஆண்டிற்குப் பின்பு நடைமுறைக்கு வரும்.

(4) இவ்வாறாக, தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின்படியான வகைமுறைகள் 01/09/2005 முதல் செயல் விளைவுக்கு வரும்.

(5) தமிழ்நாடு மின்சார வாரியம், தான் போதியளவு ஆள் மற்றும் மூலப்பொருள் போதியளவு இல்லாமையுடன் இயங்கிவருவதாகவும் மற்றும் ஆணையத்தால்

வகுத்துரைக்கப்பட்ட பல்வேறு செந்தரங்களை நிறைவேற்றுவதற்கு இடர்ப்பாடுகள் உள்ளது என்று எடுத்துரைத்துள்ளது. பணியாளர்கள் மற்றும் மூலப்பொருட்கள் போதிய அளவு இல்லாமையைச் சரி செய்வதற்கும் மற்றும் பணியாளர்களின் மனநிலையை சரியான பாதையில் செலுத்துவதற்கும் வாரியம் ஒழுங்குமுறைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட செயற்படுத்தும் இயங்குமுறையை இரண்டு ஆண்டுகள் ஒத்திபோடலாம்.

**(6)** தமிழ்நாடு மின்சார வாரியம், செந்தரங்களை நிறைவேற்றுவதற்கு தன்னால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி ஆணையத்தின் முன்பு அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.

**(7)** ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, செந்தரங்கள் முதலியவற்றை, அடைவதற்கான ஒருமைல்கல்லாக நடவடிக்கைத் திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு 1ஆம் ஒழுங்குமுறைவிதியின் (iii)ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவை ஒன்பது மாதங்களுக்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது, எனவே, 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறை 01–06–2006 முதற்கொண்டு நடைமுறைக்கு வரும்.

**(8)** 31/05/2006 வரை செயற்படுத்தும் இயங்குமுறையை ஒத்திபோட்டது 31/08/2005 அன்று அறிவிக்கை செய்யப்பட்டது.

**(9)** தற்போது, தமிழ்நாடு மின்சார வாரியம், 26/5/2005 நாளிட்ட தன்னுடைய கடிதத்தில் பின்வருவனவற்றைக் கூறியுள்ளது :–

(a) தமிழ்நாடு மின்சார வாரியம், இருந்துவரும் உள்–கட்டமைப்பு வசதியின் அதிக அளவு மேம்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையிலான எதிர்ப்பார்பிற்கு அப்பால் அதிக அளவு மின் சுமையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

(b) மேம்பாடு / புதிய பணி முதலியவை 110 kv / 230 kv மின் தொடரில் உள்ள கிடைக்கப்பெற்ற மின்னூட்ட நீக்கத்தை சார்ந்து இருப்பது மற்றும் மின் நுகர்வோருக்கு, குறுக்கீடு, இல்லாமல் இருப்பது போன்றவைகளால், திட்டமிட்டவாறு செயல்படுத்த முடியவில்லை.

(c) புதியதாகப் போடப்பட்ட சாலைகளில், மின் தொடர்களைப் பதிப்பதற்காக சாலையை வெட்டுவதற்கான ஒப்புதல் பெறுவதற்கு வெகுகாலம் ஆகிறது. அத்தகைய ஒப்புதல், ஓராண்டுகால அளவிற்குப் பின்பு அளிக்கப்படுகிறது.

(d) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் உத்தேசிக்கப்பட்ட செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள கால அட்டவணைகளைத் திருத்தம் செய்தல், ஆணையத்தினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(e) தமிழ்நாடு மின்சார வாரியம், சுனாமி, வெள்ளம் மற்றும் கடுங்கோடைக்காலங்கள் போன்ற பேரிடர்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

(f) நுகர்வோர்கள், வரையறையில்லாத மற்றும் தெரியப்படுத்தாத சுமைகளைச் சேர்த்துள்ளனர்.

(g) நிலம் கையகப்படுத்துதல், வழியுரிமை, நீதிமன்ற வழக்கு, மரம் வெட்டுதல், மின்மாற்றி மற்றும் பிற துணை மின் நிலைய சாதனத்தின் பேரிலான உள்ளமைப்பில் பெரும் இடர்ப்பாடுகள்.

(h) அண்டை மாநிலங்களில் செயற்படுத்தும் இயங்குமுறை நிறைவேற்றப்படவில்லை.

(i) எனவே செயற்படுத்தும் இயங்குமுறை இன்னுமொரு இரண்டாண்டுகளுக்கு ஒத்திப்போடப்படலாம்.

(10) இந்தத்தறுவாயில், பின்வருவன ஆணையத்தினால் பரிசீலனை செய்யப்படும்: –

(i) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் உரைக்கப்பட்ட தடைகள் / இடர்ப்பாடுகள் ஆற்றல் வாய்ந்த சமூகத்தில் பயனுடைய பணி செய்கையில் எப்பொழுதும் இருக்கிறவையாகும். இந்த ஆதாரத்தின் பேரில், வரையறுக்கப்படாத கால அளவிற்கு செயற்படுத்தும் இயங்குமுறையினை ஒத்திப்போடுவதற்காக அவர்கள் கோருதல் ஆகாது.

(ii) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் உத்தேசிக்கப்பட்ட ஒழுங்குமுறைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட கால அட்டவணையைத் திருத்தம் செய்தல், தனியாக ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது மற்றும் அறிவிக்கைச் செய்யப்பட்டுள்ளது.

(iii) தமிழ்நாடு மின்சார வாரியம், நீட்டிக்கப்பட்ட காலஅளவின் கடைசிக்கு முந்திய நாளன்று செயற்படுத்தும் இயங்குமுறையை ஒத்திபோடுவதற்கான ஆணைக்காக, ஆணையத்தின் முன்பு வந்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இத்தகைய கடைசி நேர செயல்பாட்டை ஆணையம் திருப்தியாக ஏற்றுக் கொள்ளவில்லை.

**(11)** பணியாளர்கள் போதியளவு இல்லாமை, தம்முடைய பணியாளர்களின் மனநிலையை மாற்றுவதற்கான பயிற்சிக்குத் தேவைப்படும் காலம் போன்ற நியாயமான இடர்ப்பாடுகளை பரிசீலனை செய்து, ஆணையம் செயற்படுத்தும் இயங்குமுறையை மற்றொரு ஆறு மாதங்களுக்கு ஒத்திபோடப்படுவதற்கு ஆணையிட்டுள்ளது. அதன் முன்னேற்றம் பற்றி மாதாந்திரமாக அறிவிக்க வேண்டும் மற்றும் 01/12/2006 முதல் தமிழ்நாடு மின்சார வாரியம், ஐயத்திற்கிடமின்றி செந்தரங்களை நிறைவு செய்வதற்கு தன்னைத்தானே தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற வரையறைக்கு உட்பட்டு 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகள் வகைமுறை 01/12/2006 அன்று நடைமுறைக்கு வரும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

செயலாளருக்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்